ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

3. அறிவிப்புகள்

(ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டின் முதல் துணை நிதிநிலை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு, தமிழக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சட்டமன்ற உறுப்பினரான எனக்கு உரையாற்றும் வாய்ப்பு வழங்கிய, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி அழகுபார்க்கும் எங்கள் அரசியல் ஆசான், ஏழை, எளிய மக்களின் பாதுகாவலர், இளைஞர்களின் நம்பிக்கை நாயகன், எதற்கும் அஞ்சாத துணிவும், நேர்மையும்,*